

# British MP Rebecca Long Bailey Expresses Full Support for Ban on Shavendra Silva!




Rebecca Long Bailey, the Member of Parliament for Salford and Eccles and also the Shadow Minister for Education, has emphatically called upon the British government to take decisive action to ban Sri Lankan Army Commander General Shavendra Silva, alongside other individuals implicated in war crimes, through the Global Human Rights Sanction Regime. In a momentous virtual meeting held on Friday, August 11, 2023, at 12:00 noon, Long Bailey engaged with various stakeholders on this critical issue.





The virtual meeting, led by legal expert and human rights advocate Mr. Geeth Kulasegaram, brought together significant figures including Sen Kandiah, President of Tamils For Labour; representatives from The Sri Lanka Campaign for Peace and Justice (SLC), including Campaign Director Benjamin Kumar Morris, Yvonne Schofield, representing the International Legal Center for the Prevention and Punishment of Genocide (ICPPG), Mr. Nilakin Sivalingam, and Anushan Balasubramaniam, a direct survivor of torture.

Geeth Kulasegaram addressed the meeting, tracing the historical context of Sri Lanka and underscoring the exhaustive evidence already submitted by organizations like ITJP and ICPPG to warrant the ban of Sri Lankan Army Commander Shavendra Silva. Silva's role in the loss of countless innocent Tamil lives during the final war in Sri Lanka demands immediate action, and despite this evidence, the British Foreign Office (FCDO) has not yet taken decisive measures. Additionally, Kulasegaram highlighted the ongoing atrocities under the command of Shavendra Silva, including human trafficking and torture, urging the FCDO to stand in solidarity with the affected Tamil community by banning the Sri Lankan Army Commander.

Yvonne Schofield, representing SLC, emphasized the compelling evidence of war crimes, mass graves, and genocide attributed to General Shavendra Silva in Sri Lanka. She asserted that these actions demand a ban on all war criminals, including Silva.

Sen. Kandiah echoed the sentiment, pointing out that Shavendra Silva's involvement in war crimes had been documented by the United Nations, and both the United States and Canada had imposed travel bans on him. He expressed disappointment in the FCDO's lackluster response to over 50 parliamentary requests for the ban, and he called for improved

engagement between the British foreign ministry and the Tamils.




Rebecca Long Bailey, actively engaged and receptive to the stakeholders' perspectives,

expressed gratitude for the Eelam Tamils' insights and experiences, noting that this marked their first meeting. She acknowledged the gravity of the genocide against the Tamil community in Sri Lanka and requested further information to enhance her understanding.

Anushan Balasubramaniam, a victim of the atrocities, shared his own experience and regretted the lack of previous engagement between the Tamil community and local parliamentarians. Long Bailey assured her unwavering support for the affected individuals and aligned herself with the four core demands presented by Geeth Kulasegaram. She committed to advocating for the FCDO's action to ban Shavendra Silva on behalf of her constituents, joining the All Party Parliamentary Group for British Tamils (APPGT), and participating in the All Party Parliamentary Group for Magnitsky Sanctions (APPG for Magnitsky Sanctions). Additionally, she pledged to create a video message advocating for the ban of war criminal Shavendra Silva.

Regrettably, the absence of prior engagement between the Tamil community and local parliamentarians, despite the significant Tamil population in the Manchester area and the presence of various Tamil organizations, is a sobering realization.

---

# Tamil Youth Rally Support at Labour Party's Fundraising Dinner



A passionate group of Tamil youths recently attended a fundraising dinner organized by the British Labour Party's election campaign. During the event, they seized the opportunity to engage with visiting Labour Party MPs and prominent political figures, voicing their demand for a British ban on Shavendra Silva, the Sri Lankan army commander accused of genocide. Their aim was to urge the attendees to take action with the British government in addressing this critical issue.



In April 2021, the International Truth and Justice Project (ITJP), led by Yasmin Sooka, presented substantial evidence to the British Foreign Office, calling for a ban on Shavendra Silva. Silva had commanded the 58th Division during the final war in Sri Lanka, and this division was held responsible for the deaths of numerous innocent Tamil individuals.




Regrettably, no action has been taken by the British Foreign Office thus far. Consequently, the youth group and survivors of torture have been actively conducting a series of meetings with British Members of Parliament. They have garnered support from lawyers, human rights activists, and second-generation Tamil individuals, all of whom are diligently exerting pressure on the parliamentarians.

During the fundraising dinner held on July 4, a group of impassioned youths engaged with prominent figures of the British Labour Party, utilizing the occasion as a platform to campaign against Shavendra Silva. The Shadow Minister of External Affairs, Hon. David Lammy, addressed this matter in his speech, expressing the Labour Party's awareness of the challenges faced by the Tamil Sri Lankan people. He further assured the audience that, if elected as Foreign Secretary in the upcoming election, the Labour Party would instil confidence in the community and safeguard their welfare.




The campaign to ban Shavendra Silva also received support from notable individuals such as Rose Carrot, leader of Merton Council, Mike Brunt, Mayor of Collierswood, Merton Councillor Carolyn Cooper, and Stephen Alambridis, another Merton councillor, who held a banner proclaiming “Ban Shavendra Silva.”



It is worth highlighting that the head of Tamils for the Labour Party, Mr. Sen Kandiah, led this campaign, with activists Mohamed Nifras Mohamed Nawfer, Vijay Vivegananthan , Nishanthan Nithiyananthan, Amalraj Jayakumar, Thevarasa Kajan, Kanagasabapathy Karthigesan, Manoj Prasanna, Vaheesan Visagaratnam, Ronistan Antonys Uthajakumaran, Rajasekar Ramakrishnan, Saseeskanna Nadarajah, Senavirathna Bandara, Nagarathnam Sandilyan and Vithura Vivegananthan playing instrumental roles. This accomplishment marks another significant victory for the determined youth leading the charge.




## 2 [illegible]





இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கு தற்போது நடைபெறுகின்றது.

அரச அமரர் ஊர்திக்கு மகாராணியின் பூதவுடலானது மாற்றப்பட்டு, விண்ட்சர் கோட்டைக்கு ஊர்வலமாக புறப்பட்டுள்ளது.

வெஸ்ட்மின்ஸ்டர் மண்டபத்தில் ராணியின் பூதவுடலுக்கு இறுதி மரியாதை செலுத்த பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இலங்கை நேரப்படி இன்று காலை 11 மணியுடன் ராணியின் பூதவுடலுக்கு இறுதி மரியாதை செலுத்துவதற்கான நேரம் முடிவடைந்துள்ளது.

அரச மரியாதையுடன் நடைபெறும் மகாராணியின் இறுதிச் சடங்கில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து பல்லாயிரக்கணக்கானோர் கலந்துக்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், ராணியின் உடல் தற்போது ஊர்வலமாக விண்ட்சர் கோட்டைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

விண்ட்சரிலுள்ள மன்னர் ஐந்தாம் ஜோர்ஜ் ஞாபகார்த்த தேவாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

விண்ட்சர் கோட்டையானது 40 முடியரசர்கள் வாழ்ந்த இடமாகும். இதேவேளை, இரண்டாம் உலக யுத்தத்தின் போது லண்டனுக்கு குண்டு வீசப்படும் அபாயம் காணப்பட்ட நேரத்தில் இரண்டாம் எலிசபெத் மகாராணி குறித்த கோட்டையிலேயே பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன் கோவிட் காலத்திலும் இரண்டாம் எலிசபெத் மகாராணி குறித்த கோட்டையிலேயே வசித்து வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் விண்ட்சர் கோட்டையானது அவருக்கு மிகவும் விருப்பமுடைய இடமாக காணப்பட்டமையினால் பூதவுடல் கோட்டையை நோக்கி எடுத்துச்செல்லப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

---

# ???????? ????????? ?????? ?????? ?????????????? ???????????


ROOT
66
cinch


ROOT
66
cinch

இந்திய – இங்கிலாந்து அணிகளுக்கிடையிடலான 5 ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் 5 வது நாளாகிய இன்று (5) தனது 2 ஆவது இனிங்ஸில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் பறிகொடுத்து 378 ஓட்டங்களை குவித்த இங்கிலாந்து 7 விக்கெட்டுக்களால் ஆவது போட்டியை வெற்றி கொண்டதுடன் தொடரை 2-2 என்ற சமநிலையில் நிறைவு செய்தது.

நான்காவது நாளாகிய நேற்றைய அரைச்சதங்களுடன் இன்றும் ஆட்டத்தை தொடர்ந்த ஜோ ரூட் (142) ஜொனி பிரிஸ்ரோவ் (114) ஆகியோர் சதங்களை பெற்று ஆட்டமிழக்காது களத்தில் நிற்க, இங்கிலாந்து அணி வெற்றி இலக்கை தொட்டது.

இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்திய அணி இங்கிலாந்துடனான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் மோதியது. இதில் முதல் நான்கு போட்டிகள் நிறைவில் இந்தியா 2-1 என முன்னிலை வகிக்க 5 ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி கடந்த முதலாம் திகதி இங்கிலாந்தின் பேர்மிங்கம் என்னும் இடத்தில் ஆரம்பமானது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து இந்திய அணியை முதுலில் துடுப்பெடுத்தாட அழைக்க தனது முதல் இனிங்ஸில் இந்தியா 416 ஓட்டங்களையும் பதிலுங்கு இங்கிலாந்து தனது முதல் இனிங்ஸில் 284 ஓட்டங்களையும் பெற்றது.

இதனையடுத்து தனது 2 ஆவது இனிங்ஸில் சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 245 ஓட்டங்களைப்பெற்ற இந்தியா, இங்கிலாந்துக்கு 378 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயிக்க தனது 2 ஆவது இனிங்ஸை 4 ஆவது நாளாகிய நேற்று மதிய போசன இடைவேளையின் பின் ஆரம்பித்த இங்கிலாந்து 5 ஆவதும் இறுதி நாளுமாகிய இன்று 3 விக்கெட்டுக்களை இழந்து 378 ஓட்டங்களை பெற்று வெற்றியை தனதாக்கியது.

---

# ?????? ??????????? ?????????? ??????????????? ???????????







இந்திய – இங்கிலாந்து அணிகளுக்கிடையிடலான 5 ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் 4 வது நாளாகிய

இன்று (4) மதியபோசன இடைவேளையின் பின் தனது 2 ஆவது இனிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி ஆட்டநாள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இன்றைய மதிய போசன இடைவேளையின் பின் தன்வசமிருந்த மீதம் இரு விக்கெட்டுக்களையும் பறிகொடுத்த இந்திய அணி தனது 2 ஆவது இனிங்ஸில் 245 ஓட்டங்களை பெற்றது. 2 ஆவது இனிங்ஸிற்காக இந்திய அணிக்கு புஜாரா (66) மற்றும் ரிஷிப் பன்ட் (57) ஆகியோர் அரைச்சதங்களை பெற்றுக்கொடுத்த போதிலும் ஏனைய வீரர்கள் அதிகபடியாக 23 ஓட்டங்களைக்கூட கடக்காது ஆட்டமிழந்தனர்.

இந்நிலையில் 378 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடனும் இந்தியா 2-1 என முன்னிலை பெற்றுள்ள இத்தொடரை சமநிலையில் முடிக்கும் முனைப்புடனும் பதிலுக்கு தனது 2 ஆவது இனிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து, இன்றைய 4 ஆம் நாள் ஆட்;டநேர நிறைவில் 259 ஓட்டங்களை பெற்றுள்ளது. ஜோ ரூட் (76) ஜொனி பிரிஸ்ரோவ் (72) ஆகியோர் அரைச்சதங்களைக்கடந்து களத்தில் உள்ளனர்.

---

# ????????? ???????????? ??????




-?????????

இலங்கைக்கு சுற்றுப்பயம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலியாவை 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் எதிர்கொண்ட இலங்கை அணி 3-2 என்ற கணக்கில் வெற்றி பெற்று சொந்த மண்ணில் தொடரைக்

கைப்பற்றியது.

இன்று நடைபெற்ற 5 ஆவதும் இறுதியுமான போட்டியில் அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றிருந்த போதிலும் 4 ஆவது போட்டியிலேயே தொடரின் வெற்றியை உறுதிசெய்த இலங்கை அணி கிண்ணத்தை கைப்பற்றியது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இன்று (24) நடைபெற்ற 5 ஆவது இறுதியுமான ஒருநாள் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயித்த 161 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 39.3 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களைப்பெற்று 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

வெறும் 19 ஓட்டங்களை பெறுவதற்குள்ளேயே 3 விக்கெட்டுக்களை பறிகொடுத்து ஆரம்பம் சற்று தடுமாறிய அவுஸ்திரேலிய அணிக்கு மிச்செல் மார்ஷ் – மார்னுஸ் லபுஸ்சான் இணை நிலையாண ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆறுதல் அளித்தனர். எனினும் அணி 50 ஓட்டங்களை எட்டியபோது அறிமுக வீரர் மதுஷானின் பந்துவீச்சில் மார்ஷ் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிளந்தார்.

தொடர்ச்து லபுஸ்சான், அலெக்ஸ்கோரி ஆகிய இருவரும் பொறுப்புணர்வுடன் துடுப்பெடுத்தாடி 5 ஆவது விக்கெட்டிலி; 51 ஓட்டங்களை பகிர்ந்து அணியின் மொத்த எண்ணிக்கையை 101 ஓட்டங்களாக உயர்த்தினர். இந்தநேரத்தில் 58 பந்துகளில் 31 ஓட்டங்களை குவித்திருந்த லபுஸ்சான் ஆட்டமிழந்து செல்ல நிதானத்தை இழக்காமல் துடுப்பெடுத்தாடிய அலெக்ஸ்கேரி தனது அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

அலெக்ஸ் கேரி 65 பந்துகளை எதிர்கொண்டு 45 ஓட்டங்களுடனும் கெமரன் க்ரீன் 26 பந்துகளில் 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்ப்பாக துனித் வெல்லாலகே, மஹீஷ் தீக்ஷன ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

மறுபக்கத்தில் ஆரம்பத்தில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 4வர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 160 ஓட்டங்களைப்பெற்றது.

இந்த போட்டியின் நிறைவில் அரங்கிலிருந்த ரசிகர்கள் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலையிலும் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிய அவுஸ்திரேலிய அணிக்கு நன்றிகள் தெரிவித்து கரகோசங்கள் எழுப்பியதுடன் **Thank You Australia** என்ற வாசங்கங்களுடனான பதாகைகளை காண்பித்து அவுஸ்திரேலிய அணிக்கு நன்றி தெரிவித்தனர்.


THANK YOU...
THANK YOU...
MATES FOR LIFE!


LANKA

# ??????????? ??????? ????????????? ?????? ??????




ப.சுகிர்தன்

ஐசிசி ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி ஒன்றில் அதிகூடிய ஓட்டங்களை பெற்ற அணியாக இங்கிலாந்து அணி இன்று (17) உலக சாதனை படைத்துள்ளது.

தற்போது நடைபெற்றுவரும் இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி இப்புதிய உலக சாதனையைப் படைத்துள்ளது.

முதலில் துடுப்பாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 498 ஓட்டங்களை பெற்றுக்கொண்டுள்ளது.

ஐசிசி ஒருநாள் போட்டி ஒன்றில் ஒரு அணி பெற்ற ஆகக்கூடிய ஓட்ட எண்ணிக்கையாக இது பதிவாகியுள்ளது.

போட்டியில் இங்கிலாந்து அணி சார்பில் ஜோஸ் பட்லர் 162 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொடுத்தார்.

# ??????????????????? ?????????? ?????????? ????? ???????????????? ???????????? ??????????????? ???????????????? ???????!




**–?????? ????????? ???????????????? ??? ????????? (Hon Matt Western MP) ??????????? ?????????? –**

இலங்கையில் இடம்பெற்ற தமிழ்மக்களுக்கு எதிரான இனப்படுகொலை யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட பாரிய குற்றங்களுக்காகவும், தற்போதும் இலங்கையில் தொடரும் ஆட்கடத்தல் மற்றும் சித்திரவதைக்கு பொறுப்பு கூறவேண்டிவர் என்ற அடிப்படையிலும், இலங்கை இராணுவ தளபதியான சவேந்திர சில்வாவை பிரித்தானிய அரசு தடைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவு திரட்டும் நோக்கில் கடந்த சனிக்கிழமை (21/05/2022) அன்று பிரித்தானியாவின் கல்வித்துறைக்கான நிழல் அமைச்சரும் (Shadow Minister for Education) லீமிங்டன் ஸ்பா பகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினருமான மதிப்பிற்குரிய மற் வெஸ்டேன் (Hon Matt Western MP) அவர்களுடனான முக்கிய இராஜதந்திர சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.




இலங்கையில் யுத்தத்தினாலும் சித்திரவதையாலும் பாதிக்கப்பட்டு, உயிர் பாதுகாப்புக்காக நாட்டைவிட்டு வெளியேறி பிரித்தானியால் அடைக்கலம் கேட்க நிர்பந்திக்கப்பட்டிருக்கும் தமிழர்களில் லெமிங்கன் ஸ்பா பகுதியில் வாழ்பவர்கள் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த சந்திப்பை மனித உரிமை செயற்பாட்டாளரும் மூத்த சட்ட ஆலோசகருமான திரு கீத் குலசேகரம் அவர்கள் தலைமை தாங்கினார்.

அத்துடன் தொழிற்கட்சிக்கான தமிழர்கள் (Tamils For Labour) என்ற அமைப்பின் தலைவரான திரு சென் கந்தையா அவர்கள் கலந்து கொண்டு சிறப்புக்கருத்துக்களை வழங்கியதுடன் இனப்படுகொலையை தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான சர்வதேச மையத்தின் (ICPPG) ஊடக இணைப்பாளரான திருமதி கிறிஸ்ரி நிலானி காண்டீபன் அவர்களும் கலந்து கொண்டார்.

இலங்கை அரச பயங்கரவாதத்தினால் சித்திரவதைக்குட்பட்டு தப்பிவந்த லீமிங்டன் ஸ்பா பகுதியைச் சேர்ந்த ஜனுஸ்டன் நவரத்தினம், ரஜிசன் சிவலிங்கம், துபாரகன் யோகேந்திரன், சாருபிரியன் சிறிஸ்கரன் மற்றும் ஜோன் கெனடி நிரோஷன் ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். இதன்போது இலங்கையில் இடம்பெற்ற இறுதியுத்தத்தில் பாரிய போர்க்குற்றங்களில் ஈடுபட்ட போர்க்குற்றவாளிகளை பிரித்தானியா தடை செய்ய வேண்டுமெனவும் அவர்களை சர்வதேச நீதிமன்றின் முன்னிறுத்த வேண்டுமெனவும் இதன் மூலமே பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிற்கு நீதியை பெற்றுக் கொடுக்க முடியுமெனவும் பாராளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.




விசேடமாக இலங்கையின் தற்போதைய இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திரசில்வாவினை பிரதான போர்க்குற்றவாளிகளில் ஒருவர் என உறுதிசெய்து அமெரிக்கா அவர் மீது பயணத்தடை விதித்தது போல் பிரித்தானியாவும் தடை விதிக்க வேண்டுமெனவும் அமெரிக்காவினால் அதனை செய்ய முடியுமாயின் ஏன் பிரித்தானியாவால் செய்ய முடியாது போனது என கீத் குலசேகரம் அவர்களால் கேள்வி எழுப்பப்பட்டது. மேலும் பிரித்தானியாவின் வெளிவிவகார செயலாளருக்கு சவேந்திர சில்வா மீதான தடையை கோரி ஏற்கனவே பல பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியது போல் தங்கள் தொகுதியிலுள்ள பாதிக்கப்பட்ட தமிழர்கள் சார்பில் தாங்களும் பிரித்தானிய அரசை வலியுறுத்த வேண்டுமென கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இறுதியாக பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் தான் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிற்கு இது தொடர்பில் அழுத்தம் கொடுப்பதாகவும் இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்துவதற்கு சக பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி அவர்களின் ஆதரவினை பெற்றுத்தருவதாக உறுதியளித்ததுடன் சவேந்திர சில்வா மீதான தடை நடவடிக்கையை விரைவுபடுத்தி இலங்கையில் தற்போது தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் இனவழிப்பு செயற்பாடுகளை நிறுத்துவதற்கு சர்வதேச ரீதியில் அழுத்தங்களை பிரயோகிக்க உதவுவதாகவும் உறுதியளித்தார்.

---

# ??????-20 ?????????? ?????????? ????????? ?????????? ????




–?.?????????

கிரிக்கெட் ரசிகர்களிடத்தே பெரும் வரவேற்பை பெற்ற விறுவிறுப்பும் அதிரடியும் சுவாரஷ்யமும் நிறைந்த இருபது-20 உலகக்கிண்ண தொடர் நடப்பாண்டில் (2022) அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது.

கிரிக்கெட் அரங்கில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள 8 ஆவது இருபது-20 உலகக்கிண்ணத்தொடர் அவுஸ்திரேலியாவில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை நடைபெறவுள்ளது. 16 அணிகள் களமிறங்கும் இத்தொடரில் சொந்தமண்ணில் நடப்பு சம்பியனாக அவுஸ்திரேலியா அணி களமிறங்குவது இத்தொடரின் மீது பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இருபது-20 உலகக்கிண்ண அரங்கில் இதுவரை மேற்கிந்தியத்தீவுகள் அணி 2 முறை சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக்கொண்ட அதேவேளை இந்தியா பாகிஸ்தான் இங்கிலாந்து இலங்கை அவுஸ்திரேலியா ஆகியன தலா ஒருமுறை சம்பியன் பட்டத்தை தனதாக்கியுள்ளன.

இறுதியாக கடந்த 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற தொடரின் இறுதிப்போட்டியில் நியூசிலாந்தை 8 விக்கெட்டுக்களால் வீழ்த்திய அவுஸ்திரேலியா கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது. இரு முறை உலகக்கிண்ண தொடரின் இறுதிப்போட்டிக்குள் நுழைந்த அவுஸ்திரேலியா 2010 ஆம் ஆண்டு இங்கிலாந்திடம் வெற்றியை நழுவவிட்டபோதிலும் 2021 இல் வெற்றியை தனதாக்கிக்கொண்டது.

| Edition | Year | Host(s) | Final venue | Final | | | Teams |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | Winner | Runner-up | Margin | |
| 1 | 2007 | South Africa | Wanderers Stadium, Johannesburg | India 157/5 (20 overs) | Pakistan 152 all out (19.4 overs) | 5 runs Scorecard | 12 |
| 2 | 2009 | England | Lord's Cricket Ground, London | Pakistan 139/2 (18.4 overs) | Sri Lanka 138/6 (20 overs) | 8 wickets Scorecard | 12 |
| 3 | 2010 | West Indies | Kensington Oval, Bridgetown | England 148/3 (17 overs) | Australia 147/6 (20 overs) | 7 wickets Scorecard | 12 |
| 4 | 2012 | Sri Lanka | R Premadasa Stadium, Colombo | West Indies 137/6 (20 overs) | Sri Lanka 101 all out (18.4 overs) | 36 runs Scorecard | 12 |
| 5 | 2014 | Bangladesh | Sher-e-Bangla National Cricket Stadium, Dhaka | Sri Lanka 134/4 (17.5 overs) | India 130/4 (20 overs) | 6 wickets Scorecard | 16 |
| 6 | 2016 | India | Eden Gardens, Kolkata | West Indies 161/6 (19.4 overs) | England 155/9 (20 overs) | 4 wickets Scorecard | 16 |
| 7 | 2021 | UAE<br>Oman | Dubai International Stadium, Dubai | Australia 173/2 (18.5 overs) | New Zealand 172/4 (20 overs) | 8 wickets Scorecard | 16 |
| 8 | 2022 | Australia | Melbourne Cricket Ground, Melbourne | | | | 16 |

இந்நிலையில் நடப்பு சம்பியனாக சொந்த மண்ணில் இம்முறை தொடரில் களம் காணும் அவுஸ்திரேலியா ஏனைய அணிகளுக்கு பெரும் சவாலாக இருக்கும் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்துமில்லை. இதில் அவுஸ்திரேலிய அணியின் அதிகமான வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் தொடர்ந்து ஆடிய அனுபவமுடையவர்கள் என்பதனால் இத்தொடரில் அவர்கள் அதிரடியை வெளிப்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை மறுபக்கத்தில் ஐ.சி.சி. இருபது-20 தரப்படுத்தலில் முதல் இடத்தை தக்கவைத்துள்ள இந்தியா என்றுமே தனக்குரிய தனித்துவமான ஆட்டத்தை வெளிப்படுத்தும். நடைபெற்று முடிந்த ஐ.பி.எல். தொடரில் இனம் கண்ட இளம் வீரர்களுடன் அனுபவ வீரகளுடனும் களம் இறங்கவுள்ள இந்தியா ஏனைய அணிகளிற்கு சிம்ம சொற்பனமாக இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

ஆஸ்திரேலியாவில் ஏழு இடங்களில் தொடரின் போட்டிகள் நடைபெறவுள்ளன. தொடரின் முதல் போட்டி இலங்கை மற்றும் நமீபியா அணிகளுக்கு இடையே அக்டோபர் 16ஆம் தேதி நடைபெறவுள்ளது.

சூப்பர் – 12 போட்டிகள் அக்டோபர் 22ஆம் தேதியிலிருந்து நடைபெறுகின்றன. இதில் முதல் போட்டி நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு இடையே நடைபெறுகிறது. இந்த இரு அணிகளும் 2021 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் மோதின என்பது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா முழுவதும் கிரிக்கெட் திருவிழாவுக் தயாராகிக்கொண்டிருக்கின்றன. இந்நிலையில் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடைபெறவுள்ள இத்தொடரில் சொந்த மண்ணில் நடப்பு சம்பியனாக களமிறங்கு அவுஸ்திரேலியா உலகக்கிண்ணத்தை தக்கவைத்துக்கொள்ளுமா அல்லது ஏனைய அணிகளில் ஒன்று அதனை பறித்தெடுக்குமா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.



# [illegible]




ஆப்கானிஸ்தானை தாலிபான் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதை அடுத்து அந்நாட்டுக்கு வழங்கும் உதவியை உலக வங்கி நிறுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானின் நிலைமை மற்றும் நாட்டின் வளர்ச்சி, குறிப்பாக பெண்களுக்கு ஏற்படும் தாக்கம் குறித்து தாங்கள் மிகவும் கவலையடைவதாக உலக வங்கியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உலக வங்கி கடந்த 2002 முதல் 5.3 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளதாக உத்தியோகப்பூர்வ இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ???????? ?????; ???????????????? ????
# ?????? ??????? ???????????? ????????????

தமிழர்கள் மீதான அரசின் இனப்படுகொலைக்கு நீதி கோரி யாழில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இன்று (வெள்ளிக்கிழமை) காலை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாக குறித்த கவனயீர்ப்பு போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது.

கருப்பு ஜூலை 23 நினைவு நாளை நினைவுகூர்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணி முதல் 11 மணி வரை இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், கறுப்பு ஜூலை தமிழினப் படுகொலை நாள், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே?, இன அழிப்புக்கு நீதி வேண்டும், அரசியல் கைதிகளை விடுதலை செய், வெளியேறு இராணுவமே வெளியேறு உள்ளிட்ட பல்வேறு கோசங்களை எழுப்பினர்.

குறித்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

---

# ?????????? ??????????? ??????!

திருகோணமலை மாவட்டத்தில் அதிக கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளங்காணப்பட்டதைத் தொடர்ந்து பல கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், திருகோணமலை நகர்ப் பகுதியில் மருந்தகங்கள், அத்தியாவசியத் தேவைகளுக்கான பொருட்கள் விற்பனைகள் தவிர்ந்த அனைத்து கடைகளும் மூடப்பட்டுள்ளன.

இதனால், திருகோணமலை மாவட்டத்தின் நகர்ப் பகுதி, கந்தளாய், மூதூர் மற்றும் கிண்ணியா ஆகிய நகரப் பகுதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.